### 'உங்களுடன் ஸ்டாலின்' தொடர்பான வழக்கின் தீர்ப்பின் மூலம்

# உச்சநீதிமன்றம் அ.தி.மு.க. விற்கு சம்மட்டி அடி கொடுத்துள்ளது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

**சென்னை, ஆக. 8–
தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு மூலம் அ.தி.மு.க. விற்கு உச்சநீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்துள்ளது'' என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்துள்ளார்.**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (6.8.2025) மாலை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

"உங்களுடன் ஸ்டாலின்" என்கிற ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து, அதனைஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் தமிழகத்தில் அமல்படுத்துவதற்கு, அதற்குரிய நாள் குறித்து நிகழ்ச்சிகள் அறிவிக்கப்பட்டவுடன், புதிதாக ஒரு கண்டுபிடிப்பைச் செய்து, மு.க.ஸ்டாலின் மீது அவருடைய பெயரால் திட்டத்திற்கு பெயர் இருக்கக் கூடாது என்று ஒரு புது ஞானோதயத்தோடு நீதிமன்றத்தில் சி.வி. சண்முகத்தை விட்டு எடப்பாடி பழனிச்சாமி வழக்கு போடச் செய்திருக்கிறார்.

ஒன்றை யாரும் மறந்து விட முடியாது ஜெயலலிதா ஆட்சி காலத்தில் 25 திட்டங்களுக்கு அம்மா பெயர் சூட்டப்பட்டு இருப்பதும், இந்த நாடு மறந்துவிட வில்லை. உப்புக்கு அம்மா பெயர் வைத்தார்கள், தண்ணீருக்கு அம்மா பெயர் வைத்தார்கள், உணவு விடுதிக்கு அம்மா பெயர் என்றார்கள். ஏன் காவல்துறை பட்ரோல் வண்டிக்குக் கூட அம்மா பட்ரோல் வண்டிதான் என்று பெயர் வைத்து ஏறத்தாழ 25 திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு இருந்தன.

இதனை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் அன்றைக்கு நீதிமன்றத்திற்குச் சென்று தடுக்க வில்லை. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமேயானால், ஜெயலலிதா அம்மையார் பெயரில் இருக்கக் கூடிய அம்மா உணவகத்தை தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், அந்த உணவகம் பெயர் மாற்றப்படவேண்டும் என்ற ஒரு எண்ணத்தின் அடிப்படையில், விருகம்பாக்கத்தில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த ஒரு தோழர், அம்மா உணவகம் என்ற போர்வை அகற்றியவுடன், உடனடியாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், அவர் மீது நடவடிக்கை எடுத்து வழக்குப் பதிவு செய்து வைத்து உடனடியாக அம்மா உணவகம் என்ற அந்த போர்டை அந்த இடத்தில் இருக்கும்படி செய்தார்.



**கலைஞர் வழி வந்தவர் எங்கள் முதல்வர்!**

அதோடு மட்டுமல்ல இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால் இவர்கள் ஜெயலலிதாவிற்கு சிலை வைத்திருக்கிறார்களே அந்தச் சிலைக்குக் கூட முழுமையாக அரசாங்கத்தில் இருந்து அதற்குரிய அனுமதி பெறவில்லை. யாருக்கும் தெரியாமல் அந்தச் சிலையை யாருக்காவது பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு திறந்தார்களா அது யாருக்காவது தெரிந்ததா? விளம்பரம் செய்தார்களா. திடீரென்று ஒரு நாள் சிலை வைத்தார்கள். காரணம் அதற்குரிய அனுமதிகூட பெறாமல் வைத்திருந்தார்கள்.

ஆனால், தளபதி மு.க. ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்றவுடன் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா பிறந்த நாள் விழாவை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அரசு விழாவாக நடத்தப்படும் என்று சொன்னதை தொடர்ந்து அந்தச் சிலைக்கும் எந்தப் பிரச்சினையும் வராமல் ஆண்டு தோறும் ஜெயலலிதாவினுடைய பிறந்த நாள் விழாவை அரசு விழாவாக நடத்துகிறார். இது நாங்கள் செய்தது. காரணம் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் வழி வந்தவர்.

ஆனால், "உங்களுடன் ஸ்டாலின்" என்று ஒருதிட்டத்திற்கு பெயர் வைத்தவுடன் அவசர அவசரமாக நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கை சி.வி.சண்முகம் தொடர்ந்தார். அதனுடைய விளைவு என்ன ஆனது? அந்தத் தீர்ப்பு என்ன வந்தது. எந்தத் திட்டத்திற்கும் முன்னாள் முதலமைச்சருடைய பெயரை வைக்க கூடாது, உயிரோடு இருப்பவர்களின் பெயரும் இருக்கக் கூடாது என்று ஒரு தீர்ப்பு வந்தது. இதிலிருந்து சி.வி.சண்முகம் போட்ட வழக்கு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எதிராக போட்ட வழக்கு அல்ல. அதனுடைய விளைவு என்ன ஆயிற்று என்றால், அம்மா உணவகத்தையும் எடுத்தாக வேண்டும், இன்னும் சொல்லப்போனால், அண்ணா பெயரில் இருக்கின்ற திட்டம், பெரியார் பெயரில் இருப்பது, எம்.ஜி.ஆர். பெயரில் இருப்பது, ஜெயலலிதா பெயரில் இருப்பது, கலைஞர் பெயரில் இருப்பது, அம்பேத்கர் பெயரில் இருப்பது என்று இவைகள் அத்தனையும் கூட எடுக்க வேண்டும் என்கின்ற ஒரு சூழ்நிலைதான் அவர் போட்ட வழக்கால் ஏற்பட்டு இருக்கிறது.

**அ.தி.மு.க. துரோகம்!**

இது எவ்வளவு பெரிய துரோகம் அ.தி.மு.க. தமிழ்நாட்டுக்கு செய்திருக்கிறது என்பதை குறிப்பாக அ.தி.மு.க. நண்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் ஒரு முன்னாள் அமைச்சர் சொல்கிறார், 1998 இல் அம்மையார் ஜெயலலிதா எடுத்த முடிவு ஒரு வரலாற்றுப் பிழை , அதே போல சி.வி. சண்முகம் வழக்குப் போட்டு ஜெயலலிதா பெயரிலிருந்து எல்லாவற்றையும் எடுப்பதற்குரிய வழி வகை செய்கிறார்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாட்டின்முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், இதனை எதிர்த்து மேல் முறையீடு செய்து உச்சநீதிமன்றத்தில் அரசு சார்பாக மட்டுமல்ல: திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அமைப்புச் செயலாளர் என்கிற முறையில் நானும் உச்ச நீதி மன்றத்தில் மனு செய்தோம். அந்த மனுவினை விசாரித்த உச்சநீதிமன்றம் இன்றைக்கு ஒரு சம்மட்டி அடியைத் தீர்ப்பாகக் கொடுத்திருக்கிறது.

இந்த வழக்கில் சி.வி.சண்முகம் போட்டது அரசியல் உள்நோக்கத்தோடு, இது போன்ற கேவலமான அரசியல் விளையாட்டுக்களை செய்யக்கூடாது என்றெல்லாம் கடுமையான வாசகங்களை உச்சநீதிமன்றம் கொடுத்து இருக்கிறது. அதோடு மட்டும் நிற்காமல் 10 இலட்சம் ரூபாய் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆக இனியாவது 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் எந்த அளவிற்கு மக்களிடம் வரவேற்பு பெற்றிருக்கிறது என்பதை நான்கைந்து நாட்களில் நீங்களே ஊடகங்கள், பத்திரிகைகள் கூட சர்வே செய்து பார்க்கலாம்.

இது வரையில் மக்களை மைதானத்தில் சந்தித்து மனுக்களை பெற வேண்டும் என்பது. அதற்கு நிகராக மக்களிடம் சென்று மைதானத்திலே அரசு ஊழியர்கள் நேரடியாக சந்தித்து உடனடியாக நிவாரணத்தை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது எந்த ஆட்சியிலும் நடைபெறவில்லை. அதனை தாங்கிக் கொள்ள முடியாமல் வழக்குப் போட்டார்கள், அந்த வழக்குப் போட்டவருடைய எண்ணத்திலே மண் விழுந்தது. வழக்கம் போல் தளபதியினுடைய ஆட்சியாகும். அவர் போட்ட எல்லா வழக்குக்கும் இன்னும் சொல்லப்போனால் ஜெயலலிதாவுக்கு என்று எல்லாமே தி.மு.கழகம் தான் செய்திருக்கிறது. இவர்கள் ஒரு பல்கலைக் கழகத்திற்கு ஜெயலலிதா பல்கலைக் கழகம் என்று வைத்தார்கள். அதற்கு கவர்னர் அவர்கள் அவர் ஆட்சி இருக்கும் வரைக்கும் அனுமதி கொடுக்க வில்லை. அதற்குரிய போராட்டமும் எந்தவிதமான நடவடிக்கையும் எடப்பாடி நடத்த வில்லை. தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று அந்த கவர்னருக்கு எதிர்ப்பாக போட்ட வழக்கில் பத்து பல்கலை கழகங்களுக்கு அனுமதி தர வேண்டும் என்று கொடுத்ததில் ஜெயலலிதா பெயரில் இருந்த ஒரு பல்கலைக் கழகத்திற்கும் அனுமதி வந்தது. ஆக, ஜெயலலிதா பெயரில் பல்கலைக் கழகத்திற்கும் உரிமை வாங்கிக் கொடுத்தவர் முதல்வர் தளபதி தான்.

அதே போல் அந்த அம்மாவின் திட்டங்களும் அப்படியே இருப்பதற்கு போராடி பெற்றுக் கொடுத்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தான் என்பதை இந்த வழக்கின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதுமேலும் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கிடைத்திருக்கின்ற ஒரு மகத்தான வெற்றி. தமிழக அரசு செய்திருக்கின்ற சாதனைகளுக்கு கிடைத்திருக்கக் கூடிய சான்றாகவே இந்தத் தீர்ப்பை நான் கருதுகிறேன்.

இந்த வழக்கை தலைமை நீதிபதி கொண்டு மூன்று பேர் கொண்ட அமர்வுதான் விசாரித்தது. அவர்கள் எல்லாம் இதனையெல்லாம் கேட்டுவிட்டுத்தான். இதுவெல்லாம் கேவலமாக இருக்கிறது. இவ்வளவு நாள் தூங்கிக் கொண்டு இருந்தவர்கள். (இப்படியே சொல்லி இருக்கிறார்). இவர்கள் ஆட்சியில் 25 திட்டங்களுக்கு அம்மாவினுடைய பெயரை வைத்து இருக்கிறார்கள், இதையெல்லாம் மறந்து விட்டு இப்படி வழக்கு போடுவது இங்கே அரசியல் சண்டை போடுவதற்கு நீதிமன்றம் ஒரு விளையாட்டு மைதானம் அல்ல என்கிற தொனியிலே தான் நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

ஆகவே இந்த வழக்கைப் போட்ட எடப்பாடி அவர்கள் இனி மேலாவது திருந்தி, அதனைப் பார்த்துத்தான் இன்றைக்கு பல பேர் (அ.தி.மு.க.வினர்) தி.மு.க.விற்கு திரும்பி வருகிறார்கள். அன்வர் ராஜா வந்தார். இன்றைக்கு காலையில்கூட புதுக்கோட்டையிலிருந்து கார்த்திக் தொண்டைமான் வந்து சேர்ந்திருக்கிறார். இன்றைக்கு அந்த அ.தி.மு.க.கட்சி முழுக்க முழுக்க பி.ஜே.பி. க்கு அடமானம் வைக்கப்பட்டுவிட்டது. மோடி என்ன வென்றால் நேரு பெயர் இருக்கக் கூடாது என்கிறார். காந்தி பெயர் இருக்கக் கூடாது என்கிறார். இவர் என்னவென்றால் அண்ணா பெயர் இருக்கக் கூடாது, கலைஞர் பெயர் இருக்கக் கூடாது எம்.ஜி.ஆர்.பெயர் இருக்கக் கூடாது, ஜெயலலிதா பெயர் இருக்கக் கூடாது என்கிற எண்ணத்தில் இவர்கள் செயல்படுகிறார்கள்.

இவர்கள் கேவலமான அரசியல் செய்கிறார்கள் என்று கூறிய தலைமை நீதிபதி இவருக்கு பத்து இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து இருக்கிறார். பத்துலட்சம் ரூபாய் அபராதம் என்பது மிகப் பெரிய அதுவும் உச்சநீதிமன்றம், எந்த வழக்காக இருந்தாலும் அதனை கூர்மையாக கவனித்து விசாரித்து. அதுவும் ஒரு பெரிய அரசியல் கட்சி, ஆட்சியில் இருந்த கட்சி, அப்படி இருந்தவர்கள் போடுகின்ற ஒரு வழக்கை அதற்குரிய மரியாதையோடுதான் அந்த நோக்கத்தோடுதான் பார்த்தார்கள்.

உச்சநீதிமன்றத்திற்கே கோபம் வந்ததால் தான் பத்து இலட்சம் ரூபாய் அபராதம் போட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு கொள்கை இல்லை. இரண்டும் ஒன்று தான் என்று உதாரணத்தோடு சொல்லி இருக்கிறேனே. அவர் நேரு வேண்டாம் என்கிறார், காந்தியை வேண்டாம் என்கிறார், காந்தி சுதந்திரம் வாங்கி கொடுக்க வில்லை என்று சொல்கிற கட்சி தானே பி.ஜே.பி.நேரு பெயரையே உச்சரிக்கக் கூடாது என்று சொல்பவர்தானே மோடி. இவர் அண்ணா பெயர், கலைஞர் பெயர், ஜெயலலிதா பெயர், எம்.ஜி.ஆர்.பெயர் யாரு பெயரும் சொல்லக் கூடாது என்று இவர் கேஸ் போட்டுவிட்டார். அவராவது சொன்னார். இவர் கேஸே போட்டுவிட்டார். அதனால் இரண்டு பேருக்கும் என்ன வித்தியாசம் உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.

---

### தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# ஒன்றிய அரசு, போதிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

## மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 8 -
திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் 05 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையி;ல், 15வது நிதிக் குழு, தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு, உரிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா? என்றும், குடிநீர் மற்றும் தூய்மை பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும்? வழிகாட்டு நெறிமுறைகளில் ஏதேனும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதா? என்றும், ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ்



துறை இணையமைச்சர் எஸ். பி. சிங் பாகேல் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் மாண்புமிகு பஞ்சாயத்து ராஜ் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :-

பதினைந்தாவது நிதிக் குழு, தமிழ் நாட்டில் உள்ள, உள்ளாட்சி அமைப்புளுக்கான கடந்த 2024-25 நிதி ஆண்டில் ரூபாய் 2957 கோடிகள் வழங்கியுள்ளது என்றும் இவற்றில் ரூபாய் 1774 கோடிகள் குடிநீருக்கும் தூய்மை பணிக்காகவும் செலவிடப்பட்டுள்ளது என்றும், தேவையான சான்றிதழ்கள் இதுவரை தமிழ்நாட்டு அரசிலிருந்து கிடைக்காத காரதணத்தால் 2025-26க்கான நிதியை வழங்க இயலவி;ல்லை என்றும், கடந்த 2025 முதல் 2024 வரை நான்காண்டுகளில், தமிழ்நாட்டிற்கான, குடிநீர் மற்றும் தூய்மைப் பணிகளுக்காக ரூபாய் 538 கோடிகளை வழங்கியுள்ளது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

குடிநீர் மற்றும் தூய்மைப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் முறையாக நிறைவேற்றும் வகையில், ஒன்றிய அரசின் குடிநீர் மற்றும் தூய்மைத் துறை மற்றும் 15வது நிதி தக்குழு ஆகிய அமைப்புகள் அவ்வப்போது தேவையான வழிகாட்டு நெறிமுறைகளை மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது என்றும், திருத்தியமைக்கப்பட்ட ராஷ்டிரிய கிராம சுவராஜ் திட்டத்தின் கீழ், கிராம கட்டமைப்புகளை மேம்படுத்தவும், பொருளாதாரத்தைப் பெருக்கவும், நீடித்த வளர்ச்சி குறியீட்டினை நிறைவேற்றவும், மின் ஆளுமையை பின்பற்றவும் தேவையான வழிகாட்டுதல்களை தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் உள்ள 12525 உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வகுப்புகள் மூலம் வழங்கி வருகிறது என்று ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறை இணையமைச்சர் எஸ்.பி.சிங் பாகேல் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில், செல்வராசு மன்றத்தில் இருந்து புறப்பட்டு தொ.மு.ச. சதுக்கத்தில் அமைந்துள்ள, கலைஞர் அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர்.

---

### தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில்

# கிராமப்புற சுய தொழில் பயிற்சி நிறுவனங்கள் எவ்வளவு?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக.8-
நாட்டில் மாநிலங்கள் வாரியாக கிராமப்புற சுய தொழில் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை குறித்துதிருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

(அ) தமிழ்நாடு உட்பட நாடு, மாநிலம் மற்றும் மாவட்ட வாரியாக தற்போது செயல்படும் கிராமப்புற சுயதொழில் பயிற்சி நிறுவனங்களின் (RSETI) மொத்த



எண்ணிக்கை: -

(ஆ) தமிழ்நாடு உட்பட மாநில வாரியாக, பட்டியல் சாதியினர் (SCs), பட்டியல் பழங்குடியினர் (STs) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBCs) உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு பயிற்சி மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதில் RSETIகள் திறம்பட செயல்பட்டுள்ளதா:

(இ) அப்படியானால். கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு உட்பட, மாநில வாரியாக, RSETI திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று உதவி பெற்ற SC.ST மற்றும் OBC பிரிவுகளைச் சேர்ந்த பயனாளிகளின் எண்ணிக்கையின் விவரங்கள்:

(ஈ) தமிழ்நாடு உட்பட மாநில வாரியாக RSETISஐ செயல்படுத்தும் வழிமுறையின் விவரங்கள் மற்றும் முன்னணி வங்கிகளின் பங்கு மற்றும்

(உ) கடந்த மூன்று ஆண்டுகளிலும், நடப்பு ஆண்டிலும், தமிழ்நாடு உட்பட மாநிலம் மற்றும் மாவட்ட வாரியாக, RSETI திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் அளவு என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.




வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், ஞானசேகரன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, நூருல்லா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.